1989 அக்டோபர் 31]

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயகம் திரும்பிய தமிழர்கள், குறிப்பாக நீலகிரி மலையில், சிறு விவசாயத்திலே குறிப்பிடத்தக்க அளவுக்கு ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை அந்த நிலத்தை விட்டு வெளியேற்றுகின்ற மிரட்டல்கள் அவ்வப்போது தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. எனவே, அவர்களை பாதுகாக்கக் கூடிய வகையில், அந்த நில வெளியேற்றம் தடுக்கப்படுவதோடு அந்த நிலத்தை அவர்களுக்கே சொந்தமாக்கக் கூடிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாயகம் திரும்பியோர் இன்றைக்கு விவசாயம் செய்து கொண்டிருக்கின்ற நிலங்களிலிருந்து அப்புறப்படுத்துவதற்கான அச்சுறுத்தல்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்று தெரிவித்தார்கள். அப்படி எங்கு நடைபெறுகிறது என்பதைக் குறிப்பிட்டுக் காட்டுவார்களேயானால் அரசுத் துறைகளின் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மயிலாடுதுறையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்.

* 2354 **திரு. ஏ. செங்குட்டுவன் :** மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மயிலாடுதுறையில் ஐ.டி.ஐ. ஒன்றை அரசு அமைத்துத் தருமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் தொழிற்பயிறசி நிலையம் அமைப்பதற்கான செயற்குறிப்பு இப்பொழுது இல்லை. எனவே அதைப் பற்றிய விவரம் தேவையில்லை என்று கருதுகிறேன்.